10/= இன்று இலவசம்

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 02 செவ்வாய்க்கிழமை மே 02 2017 ethirolijaffna@gmail.com 021 300 48 48



## மன்னாரில் சுற்றுலா கடற்கரை திறப்பு

மன்னார் – கீரி கடற்கரை பகுதியில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட 'கீரி சுற்றுலா கடற்கரை' வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனால் வைபவ ரீதியாக இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு மன்னார் நகர சபையின் செயலாளர் எக்ஸ்.எல்.றெனால்ட் தலைமையில் இன்று காலை நடைபெற்றுள்ளது. 3.51 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த 'கீரி சுற்றுலாக் கடற்கரை' அமைக்கப்பட்டுள்ளது

## கதவு விழுந்து சிசு சாவு

வெலிஓயா லிந்தவெவ தெற்கு பிரதேசத்தில், வீடொன்றுக்கான கதவு, விழுந்ததில் அவிஷ்க தெனுவன் கருணாசேன என்ற எட்டு மாதங்களேயான சிசு, துடித்துத்து பலியாகியுள்ளது.

## தாயும் மகளும் அடித்துக் கொலை

ஹம்பாந்தோட்டை – ஹுங்கம – குருபொகுண பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். கூரிய ஆயுதத்தால் தாக்கியே இவர்களை கொலை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. 72 வயதான தாய் மற்றும் அவரது 35 வயதான மகளுமே இவ்வாறு பலியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இந்திய தூதரக அதிகாரிகள் 'றோ' உளவாளிகளே!

### சரவணபவன் எம்.பி. பாய்ச்சல்



யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் இந்திய இராணுவம் நடத்திய படுகொலை தொடர்பில் செய்திகள் வெளியிடும்போது படுகொலை எனும் சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் எனவும், அந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டாம் எனவும் இந்திய கொன்சூலர் ஜெனரல் ஆர். நடராஜன் தன்னை கோருவதாக யாழ்.கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நடராஜன் என்பவர் இந்திய துணை தூதுவர் இல்லை. அவரது பதவி கொன்சூலர் ஜெனரல் என்பதே. இது எதுவித அதிகாரமுமற்ற பதவி. ஆனால் நடராஜனின் தன்னை இந்தியத் துணைத்தூதர் எனக் கூறிக்கொண்டு அதிகாரம் மிக்கவர் போலச் செயற்படுகின்றார் எனத் தெரிவித்துள்ள சரவணபவன் இந்திய விசா வழங்கும் அலுவலகத்தில் இந்திய புலனாய்வுப் பிரிவான றோ அலுவலர்களே பணியாற்றுவதாகவும் தெரிவித்துள்ளார்.

உதயன் நிறுவனத்தில் பணியாற்றியபோது படுகொலை செய்யப்பட்ட இரு ஊடகப் பணியாளர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



## மேதின அலை அதிர்ச்சி 'ரிப்போர்ட்'

மேதின கூட்டத்தில் பங்கேற்ற மக்களின் தொகை தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகள் மீதும் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதை வெளிப்படுத்துவதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் காலி முகத்திடலில் நடைபெற்ற மே தின பேரணியில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டதாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

விரைவில்

## மகிந்தவின் ஹர்த்தால்



விரைவில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்கட்சி முழுநாள் ஹர்த்தால் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது.

காலி முகத்திடலில் நடத்திய மே தினக் கூட்டத்திற்கு வந்த தமது ஆதரவாளர்களை மஹிந்த ராஜபக்ச நேற்று தாஜ் சமுத்ரா ஹோட்டலின் மேல் மாடியிலிருந்து கண்டுகளித்திருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து நேற்று இரவு நடத்திய கலந்துரையாடலில் வடக்கில் நடத்தப்பட்ட அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் ஹர்த்தாலைப் போன்று தாமும் ஹர்த்தால் ஒன்றை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஒன்றிணைந்த எதிர்கட்சி வந்திருக்கிறது.


## மியான்மர் அகதிகள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு!



இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த 30 மியான்மார் பிரஜைகளையும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ள மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் படகோட்டிகளான இரு இந்தியர்களையும் சட்டமா அதிபரின் அனுமதி பெறும்வரை தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

இன்று காலை குறித்த 32 பேரும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணம் முஸ்லிம் பொதுமக்கள் ஒன்றியத்தின் முஸ்லிம் சட்டத்தரணி ஒருவர் மியன்மர் மக்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

## கரையொதுங்கிய 50 அடி திமிங்கலம்



வெலிகம, கும்புருகம கடல் பகுதியில் பிரமாண்டமான திமிங்கிலம் ஒன்றின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 50 அடி நீளம் கொண்ட இந்த திமிங்கிலம் நேற்று இரவு கரை ஒதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த திமிங்கிலத்தின் உடலில் பல இடங்களில் பெரிய அளவிலான வெட்டு காயங்கள் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. பெரிய படகு ஒன்றுடன் மோதுண்டமையினால் காயமடைந்து இந்த திமிங்கிலம் உயிரிழந்திருக்கலாம் என சந்தே கிக்கப்படுகின்றது.மிரிஸ்ஸ வனவிலங்கு அதிகாரிகள் திமிங்கிலத்தை அங்கிருந்து அகற்றுவதற்கு நட வடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## வடக்கு மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை



போரின் பின்னர் வடக்கு மக்களின் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்பட வில்லை என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"போரின் பின்னரான காலப் பகுதியில் வடக்கு வாழ் மக்களின் பிரச்சினைகள் எதற்கும் தீர்வு வழங்கப்படவில்லை. காணாமல் போனவர்களின் பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை. வடக்கு மக்களுக்கு சொந்தமான காணிகள் இழக்கப்பட்ட பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு எட்டப்படும் வரையில் வடக்கில் சுதந்திரமான ஒரு மே தினக் கூட்டத்தை நடத்த முடியாது" எனவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## 3 கால்கள் சிறுமிக்கு சிகிச்சை



பங்களாதேஷில் 3 கால்களுடன் பிறந்த சோய்டி கதூ என்ற சிறுமிக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தற்போது 3 வயதை எட்டியுள்ள இச்சிறுமிக்கு அவுஸ்திரேலியாவின் மோனாஷ் சிறுவர்கள் வைத்தியசாலையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பகுதியளவு பார்வைக் குறைபாடுள்ள இச்சிறுமியால், தற்போது நடக்கவும், ஓடவும் முடி-கிறது.

### சூடுபிடிக்கும் கொரிய தளம்

# அமெரிக்காவை பாதுகாக்க கிளம்பியது ஜப்பான்



வட கொரியாவை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க கப்பல்களை பாதுகாப்பதற்காக ஜப்பானின் போர்க்கப்பல் புறப்பட்டுச் சென்றுள்ளது.

கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து, வட கொரியாவை அச்சுறுத்தும் விதமாக அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கிக்கப்பல்கள் கொரிய தீபகற்ப கடல்பகுதியை முற்றுகையிட்டுள்ளன.

இந்நிலையிலேயே, ஜப்பான் தன்னுடைய மிக பெரிய போர்க்கப்பலை அமெரிக்க போர்க்கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க அனுப்பியுள்ளது.

ஜப்பானின் கடற்பரப்புக்குள் தரித்து நிற்கும் அமெரிக்க விநியோகக் கப்பலுக்கு ஹெலிகொப்டர் தாங்கியான ஹாஸுமோஹ போர்க்கப்பல் பாதுகாப்பு வழங்கவுள்ளது.

## தெலுங்கில் ‘பைரவா’



இவ்வருட பொங்கல் ஸ்பெஷலாக வெளியான படம் விஜய்யின் பைரவா. ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு பெற்றுள்ள நிலையில், தற்போது இந்தப் படம் தெலுங்கில் “டப்” செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 26ஆம் திகதி ஆந்திரா மற்றும் தெலுங்கானா பகுதிகளில் “விஜய பைரவா” என்ற பெயரில் வெளியாகவுள்ளது.

## 3 நாளில் 500 கோடி



வசூலில் கலக்கிவரும் பாகுபலி முதல் மூன்று நாட்களில் உலகம் முழுவதும் 500 கோடி ரூபா அளவுக்கு வசூல் செய்துள்ளது.

இந்நிலையில் படத்தை ஹிந்தியில் வெளியிட்ட கரண் ஜோகர், இந்தியாவில் படத்தின் உண்மையான வசூல் மொத்தம் 303 கோடி (ஹிந்தி 128, தமிழ், தெலுங்கு, மலையாளத்தில் 175 கோடி)என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரான்ஸும் வெளியேறுமா?



ஐரோப்பிய ஒன்றியம் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை வகிக்கும் வேட்பாளர் இமானுவல் மக்ரோன் வலியுறுத்தியுள்ளார். இல்லாவிடின் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரான்ஸ் விலகிச் செல்லும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் ஐரோப்பியக் கருத்து மற்றும் கொள்கைகளை நான் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றேன்.ஆனால் நம் மக்கள் கூறுவதை கேட்க வேண்டும். இன்று அவர்கள் கோபமடைந்திருப்பதை காண முடிகின்றது. ஐரோப்பிய ஒன்றிய திட்டத்தின் சீர்திருத்தமே எனது ஆணையாக இருக்கும் என நான் கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ராஜீவ் கொலை வழக்கு:

# உச்ச நீதிமன்றம் உத்தரவு



“இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைக்கான சதி குறித்து சி.பி.ஐ., விசாரிக்கவில்லை” என குறித்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள பேரறிவாளன் தொடர்ந்துள்ள வழக்கு குறித்து அறிக்கை அளிக்கும்படி, சி.பி.ஐ.க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, இது குறித்த தனது அறிக்கையை சி.பி.ஐ. தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. வழக்கின் விசாரணை ஓகஸ்ட், 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# இந்தியப் படையின் தலைகள் துண்டிப்பு





ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லை தாண்டி இந்தியப் பகுதிக்குள் 250 மீற்றர் ஊடுருவி வந்து பாதுகாப்புப் படையினர் 2 பேரின் தலைகளை பாகிஸ்தான் படையினர் துண்டித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இந்திய இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நேற்றுக் காலை 08.30 மணியளவில் அதிரடியாக ரொக்கட் தாக்குதல் நடத்தியவாறு எல்லை தாண்டி பிரவேசித்த பாகிஸ்தான் படையினரை சற்றும் எதிர்பார்த்திராத இந்தியப் படையினர் 8 பேர் முகாமில் இருந்து வெளியே வந்த போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தி இருவரது தலைகளைத் துண்டித்துச் சென்றுள்ளனர்.

# பா.ஜ.க.வை வீழ்த்த பொது வேட்பாளர்



இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜ.க. நிறுத்தும் வேட்பாளரை தோற்கடிக்க ஏனைய கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என ஐக்கிய ஜனதா தள கட்சியின் மூத்த தலைவர் சரத் யாதவ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் வரும் ஜுலை 25ஆம் திகதியுடன் முடியவுள்ள நிலையிலேயே பொது வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்த எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக ஐக்கிய ஜனதா தள மூத்த தலைவர் சரத் யாதவ், சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்தித்து பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு நாட்களில் நடந்தது என்ன?



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் முடியும்போது பாகிஸ்தான் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 172 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 312 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடியும்போது (இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3 மணியளவில்) 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 172 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அஸார்அலி 81 ஓட்டங்களுடனும் மிஷ்பா உல் ஹக் 7 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

## அர்ஜுன விருதுக்கு புஜாராவின் பெயர்



இந்திய டெஸ்ட் அணியின் தவிர்க்க முடியாத துடுப்பாட்ட வீரராக வலம் வரும் புஜாராவின் பெயரை அர்ஜுன விருதுக்காக, மத்திய அரசிடம் இந்தியக் கிரிக்கெட் சபை பரிந்துரைத்துள்ளது.

### ஐ.பி.எல். நேற்றுவரையான புள்ளி விவரம்

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| மும்பை | 10 | 8 | 2 | 0 | 0 | 16 |
| கொல்கத்தா | 10 | 7 | 3 | 0 | 0 | 14 |
| ஹைதராபாத் | 10 | 6 | 3 | 0 | 1 | 13 |
| புனே | 10 | 6 | 4 | 0 | 0 | 12 |
| பஞ்சாப் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 |
| குஜராத் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 |
| பெங்களூர் | 11 | 2 | 8 | 0 | 1 | 5 |
| டில்லி | 8 | 2 | 6 | 0 | 0 | 4 |

குறிப்பு: போ : போட்டி வெ : வெற்றி தோ : தோல்வி ச : சமன் மு.அ. : முடிவற்றது பு : புள்ளி

# சுதந்திரக் கட்சி மத்திய குழுவில் பிளவு

காலி முகத்திடல் மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையை ரத்து செய்யும் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்து வெளியிடப்பட்டுவரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிளவு நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் ஒரு தரப்பு உறுப்பினர்கள் யோசனையை ஆதரித்துள்ள நிலையில் மற்றுமொரு தரப்பினர் இந்த யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நாளை கூட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊரை விழுங்கிய மேதினம்



யாழ்ப்பாணத்தில் மேதினம் கொண்டாடிய அரசியற்கட்சி ஒன்றின் சுவரொட்டிகள் வீதிக் குறிகாட்டிக் கற்களைக் குறிவைத்தே ஒட்டப்பட்டிருந்தன. இதனால் பல ஊர்களின் பெயர்கள் இந்தச் சுவரொட்டிகளுக்குள் மறைந்து போய்விட்டன.

## அலையில் அடித்து செல்லப்பட்ட யுவதி

சிலாபம் கடற்பிரதேசத்தில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த யுவதியொருவர் கடல் அலையில் சிக்குண்டு காணாமல் போயுள்ளார். நேற்று மாலை நிகழ்ந்த இவ் அனர்த்தத்தில் சிலாபம் இலிப்படெணிய- கிழக்கு முங்கத்தலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான டில்கி ஷிகாரா பிஸ்மத் என்ற யுவதியே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குப்பை மேட்டில் ஆய்வு

கண்டி – கொஹாகொட பகுதியிலுள்ள குப்பை மேடு தொடர்பில் இன்று மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக, பேராசிரியர் அதுல சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.


இதன்போது, குறித்த பகுதி தொடர்பில் ஆராய்ந்து தீவிரமான பரிசோதனைக்கு உட்படுத்த எதிர்பார்த்துள்ளதாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## குளத்தில் மூழ்கி சிறுவன் பலி

அம்பாறை, வாங்காமம் மலையடிக் குளத்தில் நீராடிய ஏறாவூரைச் சேர்ந்த செய்னுலாப்தீன் முஸ்தாக் அஹமட் (வயது 16) என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் 11ஆம் ஆண்டில் கல்விகற்கும் இம் மாணவன் நேற்று தனது நண்பர்களுடன் சுற்றுலாச்சென்று குளத்தில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென அவர் நீரில் மூழ்கியுள்ளார். குளத்தில் நீராடிய இவர்களில் எவருக்கும் முறையாக நீச்சல் தெரிந்திருக்காமையால் குறித்த சிறுவனை எவரும் காப்பாற்ற முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மகிந்தவிற்கு ஆயுள் தண்டனை!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆயுட் தண்டனை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மகிந்தவின் பாவங்களை இந்த அரசே சுமப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சி மேதின கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2005 ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக மகிந்த ராஜபக்ஷ, புலிகளுக்கு 2 மில்லியன் ரூபா பணம் வழங்கியிருந்தார். இதற்காக அவருக்கு ஆயுட் தண்டனை வழங்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே மீதொட்டமுல்ல குப்பை மேடு 30 மீற்றர் வரை உயர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மீதொட்டமுல்ல மீண்டும் சரியுமா?

மீதொட்டமுல்லை குப்பை மேடு பகுதியில் மீண்டும் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக குறிப்பிட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அப் பகுதியிலுள்ள மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் அறிவித்துள்ளது.

அவதானத்திற்குரிய பகுதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ள பிரதேசங்களில் இருப்பவர்களை அங்கிருந்து வெளியே றுமாறு முன்னரே எச்சரிக்கப்பட்டிருந்தபோதிலும் சுமார் 200க்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறாமல் அப் பகுதியிலேயே தங்கியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கொரியப் போர் வெடித்தால் இலங்கையரை மீட்க விசேட திட்டம்

வடகொரியா மற்றும் தென்கொரியாவுக்கு இடையில் மோதல் ஏற்பட்டால் அங்கு வாழும் இலங்கையர்களை பாதுகாப்பாக மீட்கும் வேலைத்திட்டம் ஒன்றை வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

குறித்த அமைச்சின் செயலாளர்களின் விசேட கோரிக்கைகளுக்கமைய கொரிய தூதுவரினால் இது தொடர்பில் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

மோதல் நிலைமைகள் ஏற்பட்டால் அதன் பாதிப்பை குறைத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு இலங்கையர்களை நகர்த்தி தூதுவர் ஊடாக அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மேதினத்தில் புலிக்கொடி



புலம்பெயர் ஈழத்தமிழர்களின் மேதினப் பேரணி நேற்று சுவிஸில் நடைபெற்றிருந்தது. நூற்றுக் கணக்கானவர்கள் பங்கெடுத்திருந்த இப் பேரணியில் ஏராளமானோர் விடுதலைப் புலிகளின் கொடி மற்றும் பிரபாகரனின் படத்தினையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது விடுதலைப் போராட்டம் தொடர்பான புரட்சிப் பாடல்கள் ஒலிக்கப்பட்டதோடு 'தமிழீழம் வேண்டும்' என்ற கோஷங்களும் எழுப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

## தாயைத் தாக்கிய தனயன் சிறையில்

வயதான தாயொருவரை கடுமையாக தாக்கிய மகனை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வெலிவேரிய தெற்கு எம்பரலுவ பிரதேசத்தில் ஏற்பட்ட காணிப் பிரச்சனையில், 74 வயதான தாயை கீழே தள்ளி 30 வயதுடைய மதுசங்க சமத் என்பவரே கடுமையாக தாக்கியுள்ளார்.

## 68 நாட்களாகத் தொடரும் மக்கள் போராட்டம்




படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலை வலியுறுத்தியும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்கக் கோரியும் அவர்களது உறவினர்கள் வவுனியாவில் மேற்கொண்டு வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் 68ஆவது நாளாகவும் இன்று தொடர்கிறது.

இந்த போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## நாளை நாளும் கோளும்

03.05.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 20ஆம் நாள்.

அட்டமி பி.இ. 01.09 வரை | பூசம் மு.ப. 09.49வரை | மரணயோகம் | சித்தம்

இராகுகாலம் 11.56-01.26 | சுபநேரம் 04.26-05.56 | எமகண்டம் 07.26-08.56

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்வு | சுகம் | லாபம் | அன்பு | இன்சொல் | வரவு | தடங்கல் | பகை | ஆசை | சுபம் | வாழ்வு | சாதனை |

எதிரொலி
Ethiroli

## நல்லாட்சி அரசுக்கு
# மக்களின் ஆதரவில்லை



தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவது குறித்து மைத்திரி – ரணி லின் நல்லாட்சி அரசாங் கம் எண்ணிப் பார்ப்பதும் சிரமமானது என பல் கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள் ளார்.

காலிமுகத் திடலில் நடந்த கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டம் தொடர்பில் தனது முகநூலில் எழுதியுள்ள குறிப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.


அரசாங்கத்தின் இருப்புக்கு சிங்கள பௌத்த மக்களின் ஆதர வில்லை என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

## கசிப்புக் குகை பிடிபட்டது

திருகோணமலை கிண்ணியா கண்டல்காடு களப்பு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பிராந்திய விஷதன்மை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்ட நபர்கள் தப்பிச்சென் றுள்ளனர். இதன்போது கசிப்பு உற்பத்திகான மூலப்பொருளான கோடா 335 லீற்றரும் இரண்டு பரல்களும் கைப்பற்றப்பட் டன. தப்பிச்சென்ற நபர்களை தேடும் பணி தொடர்கிறது.

## அந்த நாள் ஞாபகம்.....!




1928.05.02

அமெரிக்காவின் பிரபல கேலிச்சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி குழந்தைகளின் கனவுப் பாத்திரமான மிக்கி மவுஸை (மிக்கி எலி) இதேநாளில் தான் முதன் முதலாக வரைந்தார். அதன் பின்னரே அவர் புகழ் பெற்ற கேலிச்சித்திர ஓவியராக அறியப்பட் டார். இன்றும் மிக்கி மவுஸ் குழந்தைகளுக்கு பிடித்தமான கார்ட்டூன் கதாபாத்திரமாக இருக்கிறது.

## உலகின் மூத்தவர் மரணம்



உலகிலேயே இதுவரை வாழ்ந்தவர்களில் மிகவும் அதிக வயதானவராக கருதப் பட்ட 146 வயதான சோடி மெட்ஜோ இந்தோனேசியா வின் மத்திய ஜாவாவில் உள்ள தனது கிராமத்தில் மரணமடைந்தார்.

இவர் 1870 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறந்தவர் என்று ஆவணங்கள் சான்றளிக்கின்றன. ஆனால், இந்தோனேசியாவில் 1900ஆம் ஆண்டில்தான் பிறப்புப் பதிவு நடைமுறை தொடங்கப்பட்டதால், அதற்கு முந்தைய ஆவணங்களில் தவறுகளும் இருக் கலாம். எனினும் சோடிமெட்ஜோ அளித்த ஆவணங்க ளின் அடிப்படையில் அவரது வயது 146 என்பது உண்மை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வன அதிகாரியை தாக்கியவர் கைது

தர்மபுரம் பகுதியில் வனப் பிரிவு அதிகாரிகள் இருவரைத் தாக்கி, அவர்களது கடமைகளுக்கு இடையூறு விளைவித்த தாக கூறப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக கல்லாறு வனப் பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவரை கைதுசெய்து அழைத்து வந்த போது அவர்கள் அதிகாரிகளைத் தாக்கிவிட்டு தப்பித்துச் சென்ற நிலையிலேயே பொலிசார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.




1100 கடந்த நான்கு மாதங்களில், சமூக வலைத்தளங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில், சுமார் 1,100 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக, இலங்கை கணினி அவசரத்தயார் நிலைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தப்பிரிவின் பாதுகாப்புப் பொறியியலா ளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவிக்கையில், “போலியான பேஸ்புக் கணக்குகள் தொடர்பிலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன. 2016ஆம் ஆண்டு, போலியான பேஸ்புக் கணக்குகள் தொடர்பில், 2,200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இந்த முறைப்பாடுகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான அச்சுறுத் தல்களும் உள்ளடங்குகின்றன” என்றார்.

## ஈழத் தமிழருக்காக பேசப் போகும் ஸ்டாலின்

ஈழ தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து, ஜெனீவாவில் ஜுன் 12ம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய கூட்டத்தில் உரையாற்ற, திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலி னுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக சார்பில் வெளியான அறிக்கையில், திமுக சார்பில் மு.க.ஸ்டா லின் சார்பில், ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட டெசோ மாநாட்டுத் தீர்மானங்கள்



இந்த ஆண்டுக்கான ஐ.நா. அறிக்கையில் இடம்பெற் றுள்ளன. அப்பிரச்சினைக ளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக திமுக எடுத்து வரும் நிலைப்பாடு உலக அரங்கில் ஆணித்தரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

## சுழியில் அகப்பட்டு இளைஞன் பலி



சவுத் மடக்கும்புர ஆற்றில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது. திம்புள்ள மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த தியாகராஜ் வினோதன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது 3 நண்பர்களுடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த இளைஞன் சுழியொன்றில் அகப்பட்டுள்ளார். அகப்பட்ட குறித்த இளைஞனை ஏனைய நண்பர்கள் காப்பாற்ற முயற்சித்த போதும் முயற்சி பயனளிக்க வில்லை. இதனையடுத்து, இன்று காலை 10.30 மணியளவில் நுவரெலியா மாவட்ட பொலிஸ் பாதுகாப்பு பிரிவினரும் திம்புள்ள பத்தனை பொலிஸாரும் பிரதேச மக்களும் இணைந்து குறித்த இளைஞனின் சடலத்தை ஆற்றிலிருந்து மீட்டுள்ளனர்.

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அத தெரண

## ஹெரோயினுடன் இருவர் கைது

மருதானை பகுதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். சந்தேகநபர் வசம் இருந்து 5 கிராம் 480 மில்லிகிராம் ஹரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, 3 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் இன்னுமொருவர் பேலியகொடை – நுகேபார வீதியில் வைத்து கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இவர் பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 30 வயதானவர் எனத் தெரியவந்துள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தன் என்பவரால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 02.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.